முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S. No. 93/2021

தேதி : 30–08–2023

(வா.சா.1) – ரூபா

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணை : (1–ம் பிரதிவாதி தரப்பில்)

வேணுகோபால், ராமசாமி மற்றும் அங்கம்மாள் ஆகியோர் முத்துச்சாமி பிள்ளை என்பவரின் மக்கள் என்றால் சரிதான். அங்கம்மாளுக்கு திருமணமாகி அவருக்கு கணவன், மகன் மற்றும் மகள் இருக்கிறார்கள் என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கள் முத்துச்சாமி பிள்ளைக்கு சுயார்ஜிதமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். முத்துச்சாமி பிள்ளை தாவா சொத்துக்களை பொறுத்து யாருக்கும் எந்த பத்திரமும் எழுதிகொடுக்கவில்லை என்றால் சரிதான். அவருடைய நேரடியான வாரிசுகள் வேணுகோபால், ராமசாமி மற்றும் அங்கம்மாள் ஆகியோர் என்றால் சரிதான். என் பெரியப்பா ராமசாமிக்கு தாவா சொத்துக்களில் எவ்வளவு பங்கு பாத்தியம் என்று எனக்கு தெரியாது. ராமசாமிக்கு குழந்தைகள் எதுவும் இல்லை. ஆனால் அவர் ஒரு குழந்தையை தத்தெடுத்து கொண்டார். ராமசாமி இறந்த பிறகு தான் வேணுகோபால் இறந்தார். ராமசாமியின் பாகத்தை பொறுத்து அவர் யாருக்கும் பத்திரம் எதுவும் எழுதிவைக்கவில்லை. ராமசாமி இறந்தபோது என் அப்பா உயிருடன் இருந்தார். ராமசாமிக்கு வாரிசு என்ற முறையில் என் அப்பா தான் இருந்தார். தாவா சொத்திற்கு ராமசாமி பெயரிலும், வேணுகோபால் பெயரிலும் கூட்டுப்பட்டா உள்ளது. இருவரும் இறந்த பிறகும் இன்று வரை மேற்படி கூட்டுப்பட்டா அவர்கள் பெயரிலேயே உள்ளது.

தாவா சொத்திற்கான மின் இணைப்பு, வீட்டு வரி, குடிநீர் வரி ஆகியவை மேற்படி இரண்டு பேர் பெயரிலும் உள்ளது. அது சம்பந்தப்பட்ட ஆவணங்களோ, ரசீதுகளோ என்னிடம் இல்லை. ரசீதுகள் அனைத்தும் வேணுகோபால் பெயரில் தான் உள்ளது என்றும், நான் சொல்வது போல் இரண்டு பேர் பெயரிலும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்து பழனி டவுண், பாறைக்கடைத் தெரு, கதவு எண். 8/32–ல் உள்ளது என்றால் சரிதான். நான் தற்போது கரூர் நகரில் குடும்பத்தோடு வசிக்கிறேன். எனக்கு திருமணம் ஆகி 20 ஆண்டுகள் ஆகிறது. தாவா சொத்தில் தற்போது என் உடன் பிறந்த சகோதரர் இளங்கோவனும், என் பெரியப்பா மகன் பிரேம்குமாரும் இருக்கிறார்கள். என் அம்மா இறந்தபோது ஈமச் சடங்குகள் தாவா சொத்தில் உள்ள வீட்டில் வைத்து நடந்தது. 1–ம் பிரதிவாதி என் அம்மா பார்வதிக்கு ஒரே மகன். 1–ம் பிரதிவாதி தான் என் அம்மாவிற்கு ஈமச்சடங்கு காரியங்கள் செய்தார். இந்த வழக்கு தாக்கல் செய்யும்வரை எனக்கும், 1–ம் பிரதிவாதிக்கும் நல்ல பேச்சுவார்த்தை இருந்தது. 2–ம் பிரதிவாதிக்கு பாகம் பிரித்துக் கொடுக்காததால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்தேனா என்றால் அவ்வாறு இல்லை. முத்துச்சாமி பிள்ளையின் வாரிசு என்ற முறையில் அங்கம்மாளுக்கும் தாவா சொத்தில் பாகம் உள்ளதா? இல்லையா? என்றால் அவருக்கு பாகம் இல்லை. அதனால் தான் அங்கம்மாளின் வாரிசுகளை நான் இந்த வழக்கில் கட்சி சேர்க்கவில்லை. அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது. காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்தா என்றால் ஆவணத்தை படித்துப் பார்க்காமல் அது பற்றி என்னால் சொல்ல முடியாது (ஆவணம் மடித்து மறைக்கப்பட்டு கையெழுத்து மட்டும் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டு கேட்கப்பட்டது). என்னுடைய கையெழுத்தை என்னால் அடையாளம் காண்பிக்க முடியும். என்னிடம் காட்டப்படும் 05.06.2020–ம் தேதிய ஒப்புதல் பத்திரத்தில் உள்ள

கையெழுத்து என்னுடைய கையெழுத்து அல்ல. அதில் உள்ளதுபோல் நான் கையெழுத்து போடமாட்டேன். காட்டப்படும் பிராதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னிடம் காட்டப்பட்ட 05.06.2020 தேதிய ஒப்புதல் பத்திரத்தில் உள்ள கையெழுத்தும், பிராதில் உள்ள கையெழுத்தும் ஒன்று தான் என்றும், நான் தற்போது மேற்படி ஒப்புதல் பத்திரத்தில் உள்ள கையெழுத்தை வேண்டுமென்றே மறுக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் தாவா சொத்தில் என்னுடைய பாத்தியத்தை 1–ம் பிரதிவாதிக்கு விட்டுக்கொடுத்துவிட்டு அவரிடமிருந்து அதற்கு மறுபயனாக ரூபாய் மூன்று லட்சம் பெற்றுக்கொண்டு 05.06.2020 தேதிய ஒப்புதல் பத்திரம் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. அந்த ஒப்புதல் பத்திரம் மூலமாக தேவைப்படும்போது பத்திரம் எழுதி பதிவு செய்து தருவதாக ஒப்புக்கொண்டேன் என்றால் சரியல்ல. நான் ஒப்புதல் பத்திரம் எழுதிக்கொடுத்துவிட்டு வழக்கிற்காக அதனை மறுக்கிறேன் என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதிகளுக்க வழக்கு அறிவிப்பு அனுப்பவில்லை. பாகப்பிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 1–ம் பிரதிவாதியிடம் பொது மனிதர்கள் மூலம் கேட்டேன். யார் அந்த பொது மனிதர்கள் என்று பிராதில் சொல்லவில்லை. நான் ஒரு பக்கம் பணத்தை பெற்றுக்கொண்டு பாக உரிமையை விட்டுக்கொடுத்துவிட்டு இன்னொரு பக்கம் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்ய துணிந்துவிட்டதால் தான் பிரதிவாதிகளுக்கு வழக்கு அறிவிப்பும் அனுப்பவில்லை மற்றும் பொது மனிதர்கள் மூலமும் பேசவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. ராமசாமி பிள்ளைக்கு 2–ம் பிரதிவாதி தத்துப்பிள்ளை என்று நான் சொல்கிறேன். அவர் தத்து மகன் என்பதற்கு என்னிடம் ஆதாரம் எதுவும் இல்லை. ராமசாமி பிள்ளை தனது தம்பி மகனான 1–ம் பிரதிவாதியை தான் தன் சொந்த மகனாக வளர்த்து ஆளாக்கினார்

என்றும், 2−ம் பிரதிவாதியை தத்து மகனாக எடுக்கவும் இல்லை மற்றும் வளர்க்கவும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. தாவா வீட்டில் வடக்குப் பக்கம் ராமசாமி பிள்ளை குடியிருந்தார். தெற்கு பக்கம் வேணுகோபால் குடியிருந்தார். மாடி பகுதியில் நாங்கள் இருந்தோம். ராமசாமி மற்றும் வேணுகோபால் காலத்தில் மாடியை வேணுகோபால் தரப்பில் நாங்கள் புழங்கிக் கொண்டிருந்தோம். ராமசாமி இறந்த பிறகு எனது கல்யாணம் நடந்தது. எனக்கு திருமணம் ஆன காலத்திலிருந்து நான் கரூரில் தான் வசிக்கிறேன் என்றும், பழனியில் வசிப்பதாக தவறாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. 2−ம் பிரதிவாதி என் அம்மாவின் அக்கா மகன். அந்த முறையில் அவர் எனக்கு சகோதரர். இந்த வழக்கு நடத்துவதற்கு நான் மற்றும் 2−ம் பிரதிவாதி ஆகியோர் இன்று வந்துள்ளோம். தாவா சொத்தைப் பொறுத்து 2−ம் பிரதிவாதி 3−ம் நபர் என்றும், அவருக்கு தாவா சொத்தில் எந்த பாகமும் கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்தின் அமைப்பை மாற்றக்கூடாது என்றும், மின் இணைப்பை துண்டிக்கக்கூடாது என்றும் கேட்டு 1−ம் பிரதிவாதி இந்த வழக்கில் ஒரு இடைக்கால மனு தாக்கல் செய்தார் என்றால் எனக்கு தெரியாது. அந்த விபரம் 2−ம் பிரதிவாதிக்கு தெரியும். என் தாயாரை என் அண்ணன் 1−ம் பிரதிவாதி சுத்தமாக பார்த்துக்கொள்ளவில்லை என்ற கோபம் அவர் மீது எனக்கு உண்டு. அதனால் தான் 1−ம் பிரதிவாதியுடன் எனக்கு பேச்சுவார்த்தை இல்லாமல் போனது. அதனை தொடர்ந்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். என் அம்மாவை 1−ம் பிரதிவாதி சரியாக கவனித்துக்கொள்ளவில்லை என்று அதற்கு எதிர் நடவடிக்கையாக தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் 2−ம் பிரதிவாதியுடன் சேர்ந்துகொண்டு 1−ம் பிரதிவாதிக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ராமசாமி இறந்த பிறகு அவரது ஒரே வாரிசாக

வேணுகோபால் பிள்ளை மட்டும் தான் இருந்தார் என்றும், அவர் மூலமாக 1–ம் பிரதிவாதிக்கு ராமசாமியின் பாகத்தை பொறுத்து பாத்தியம் ஏற்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. ராமசாமியின் பாகத்தை பொறுத்தும் நான் 1–ம் பிரதிவாதிக்கு எனது பாக உரிமையை விட்டுக்கொடுத்து ஒப்புதல் பத்திரம் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து முழுவதும் 1–ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. ராமசாமி பிள்ளை 2–ம் பிரதிவாதி உட்பட யாரையுமே தத்தெடுக்கவில்லை என்றால் சரியல்ல. தத்தெடுக்காத 2–ம் பிரதிவாதியை ராமசாமியின் தத்து மகன் என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் 3/4 பாகத்தை 1–ம் பிரதிவாதியிடமிருந்து அபகரிக்கும் நோக்கத்தில் பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சட்ட காலத்திற்கும் மேலாக தாவா சொத்தில் கூட்டுச் சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் மதிப்பு சுமார் ரூபாய் இருபது லட்சம் அல்லது ரூபாய் முப்பது லட்சம் இருக்கும். நான் இந்த வழக்கில் தாவா சொத்தின் உண்மையான மதிப்பை மறைத்து இந்நீதிமன்ற அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வேண்டுமென்றே அவசியமான தரப்பினரை தவிர்த்துவிட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

(2–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது).

J JEYA SUTHAHAR
Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2023.08.30 16:55:21 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.